## பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு

# எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம்

# வெற்றிடங்கள்

எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகுதிபெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பதவி – பொது முகாமையாளர் (நிரந்தரம்)

**தகைமைகள் - வெளிவாரி அபேட்சகர்கள்**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து இளமாணிப் பட்டம் மற்றும் முகாமைத்துவத்தில் பட்டப் பின்படிப்பு தகைமை (முதுமாணி) அல்லது முகாமைத்துவத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் கூட்டு அங்கத்துவம் அத்துடன் முதல் பட்டம் பெற்ற பின்னர் அரசு அல்லது தனியார் துறை வர்த்தக நிறுவனத்தில் முகாமைத்துவ தரத்தில் 20 ஆண்டுகள் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு அதில் நிருபிக்கப்பட்ட களப் பதிவுடன் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் 05 ஆண்டுகள் இருத்தல் வேண்டும்.

- உள்ளக

பிரதிப் பொது முகாமையாளர் பதவியில் சிரேஷ்ட முகாமைத்துவ பிரிவில் குறைந்தது 03 ஆண்டுகள் திருப்திகரமான சேவை

சம்பள அளவு – மாதத்திற்கு ரூபா 161,140/-, 12x4850 = 219,340/- (HM 2-1 2025) + அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்

அடிப்படைச் சம்பள படி - ரூபா 119,494/- (2025/01 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் அட்டவணை ii இன்படி)

வயதெல்லை – 40 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**மற்ற நன்மைகள்:**

- உள்ளக மற்றும் வெளி மருத்துவ காப்புறுதித் திட்டத்தின் வசதிகள்.
- ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அல்லது இலங்கை பெருந்தோட்ட சேமலாப நிதியத்திற்கு உங்கள் சம்பளத்தில் குறைந்தபட்சம் 10% பங்களிப்பும், அத்தகைய சேமலாப நிதிக்கான EPL பங்களிப்பு அதிகபட்சமாக 12% ஆகவும், உங்கள் சம்பளத்தில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% ஆகவும் அமையும்.
- உத்தியோகபூர்வ வாகன மற்றும் எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும்.
- முழுமையான தளபாடங்களுடனான பங்களா வழங்கப்படும்.

## பதவி – தோட்டக் கண்காணிப்பாளர் (ஒப்பந்த அடிப்படை)

**தகைமைகள் - வெளிவாரி அபேட்சகர்கள்**

ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து விவசாயத்தில் இளமாணிப் பட்டம்

**அத்துடன்**

தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் ஏனைய கலப்பு பயிர் தோட்டத் துறையில் 3 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம். பெருந்தோட்ட முகாமைத்துவ டிப்ளோமா சான்றிதழ், விவசாயத்தில் டிப்ளோமா சான்றிதழ் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் உள்ள அறிவு மேலதிக தகைமைகளாக அமையும்.

**உள்ளக**

கனிஷ்ட முகாமைத்துவ பிரிவு, தரம் I இல் எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தின் உதவித் தோட்ட கண்காணிப்பாளர் பதவியில் குறைந்தது 5 ஆண்டுகள் திருப்திகரமான சேவை

சம்பளம் - ரூபா 121,280 (அனைத்தும் உள்ளடங்கலாக)

வயது - 25 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

## பதவி – உதவிக் கண்காணிப்பாளர் (ஒப்பந்த அடிப்படை)

**தகைமைகள் - வெளிவாரி அபேட்சகர்கள்**

ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து விவசாயத்தில் இளமாணிப் பட்டம்

**அத்துடன்**

மேற்பார்வை திறனில் தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் ஏனைய கலப்பு பயிர் தோட்டங்களில் 01 ஆண்டு அனுபவம்.

**உள்ளக**

தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் ஏனைய கலப்பு பயிர் தோட்டத் துறையில் தரம் 1 முகாமைத்துவ பிரிவு பதவியில் குறைந்தது 05 ஆண்டுகள் அனுபவம்.

சம்பளம் - ரூபா 80,165 (அனைத்தும் உள்ளடங்கலாக)

வயது - 25 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை**

நியமன நிர்வாகத்தினால் நியமிக்கப்பட்ட குழு ஒன்றினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை முடிவு ஒன்றின் அடிப்படையில்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

| | |
|---|---|
| ● தொடர்புடைய மேலதிக அனுபவம் | 30 புள்ளிகள் |
| ● தொடர்புடைய மேலதிக தகைமைகள் | 30 புள்ளிகள் |
| ● மற்ற அடைவுகள் | 15 புள்ளிகள் |
| ● நேர்முகப்பரீட்சையின் செயல்திறன் | 25 புள்ளிகள் |
| | 100 புள்ளிகள் |

மற்றவை - இந்தப் பிரிவுக்கான அனைத்து ஆட்சேர்ப்புகளும் இந்த ஆட்சேர்ப்புத் திட்டத்தின் விதிகளுக்கு கண்டிப்பாக இணங்கியதாக அமையும்.

அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் என்பதோடு சிறந்த பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பம் - அனைத்து விபரங்கள் மற்றும் பிறப்புச் சான்றிதழ் மற்றும் அனுபவத்தின் பிரதிகளுடன் சேர்த்து விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்தை கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைப்பதற்கு அனுப்புதல் வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி – கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைப்பதற்கு 2025 ஒக்டோபர் 27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்.

**தலைவர்**
**எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம்**
**ரத்வத்த, உக்குவெல.**

**வெளியிடப்பட்ட திகதி 2025.10.10**